# ஊடக அறிக்கை: ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - சோஷல் இன்டிகேட்டர்

**அறிமுகம்**

இந்த அறிக்கையானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கணிப்பீட்டாய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் சமீபத்தில் நடாத்தப்பட்ட ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி (2ஆவது அலை) ஆய்வின் முடிவுகளை வெளியிடுகின்றது. தற்போதைய நெருக்கடி நிலைமையின் கீழ் மக்களின் அனுபவங்களை படம்பிடித்து காட்டுவது விஞ்ஞான ரீதியான இந்தக் கருத்துக்கணிப்பின் நோக்கம் ஆகும். மேலும், நெருக்கடிக்கான காரணங்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் என்பவை தொடர்பில் பொதுமக்களின் கண்ணோட்டத்தை ஆராய்கிறது. ஸ்திரமற்ற அரசியல் நிலைமையினை கருத்தில் கொண்டு, சோஷல் இன்டிகேட்டரின் நாடளாவிய கள வலையமைப்பினைப் பயன்படுத்தி இந்த ஆய்வு மிகக்குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

**முறைமை**

ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி (2ஆவது அலை) யானது பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தினைப் பயன்படுத்தி நான்கு பிரதான இன சமூகங்களைச் சேர்ந்த (சிங்கள, தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம்) 1200 பதிலளிப்பவர்களை மாதிரியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. மாதிரி பகிர்வானது நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கிராமிய மற்றும் நகர்ப்புறங்களைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்களை உள்ளடக்குகின்றது. பல கட்டங்களில் எழுமாற்றைக் கொண்ட அடுக்கு மாதிரி தெரிவு நுட்பத்தைப் பயன்படுத்தி மாதிரி இடம் தெரிவு செய்யப்பட்டதுடன், பதிலளிப்பவர்களைத் தேர்ந்தெடுக்க பனிப்பந்து மாதிரி நுட்பம் பயன்படுத்தப்பட்டது. ஆய்வுக்கான வெளிக்களப்பணிகள் 2022, ஏப்ரல் 19 முதல் 25 வரை நடாத்தப்பட்டன. மக்கள் தொகையின் உண்மையான மாவட்டம் மற்றும் இன விகிதத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தரவுத்தொகுப்பு மதிப்பேற்றப்பட்டது. சமூக அறிவியலுக்கான புள்ளிவிபரவியல் தொகுப்பைப் (SPSS) பயன்படுத்தி தரவுத் தொகுப்பானது பகுப்பாய்வு செய்யப்பட்டது.

**ஆய்வு முடிவுகள்**

**துன்பத்தின் பரவல்**

நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு எதிரான பொதுமக்களின் கூக்குரலானது காலிமுகத்திடலில் நடைபெறும் எதிர்பார்பாட்டத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக அல்லாது, நாடு முழுவதும் உள்ள அனைத்து இன மற்றும் பொருளாதார குழுக்களைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியிலும் உள்ளது எனும் தகவலை அரசாங்கத்திற்கு இந்த ஆய்வு முடிவுகள் தெளிவாகத் தெரிவிக்கின்றது. இலங்கை மக்களில் அதி பெரும்பான்மையானவர்கள் தற்போதைய நெருக்கடி நிலைமையினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன.

கடந்த ஒரு மாத காலத்தில் தாம் அல்லது தமது குடும்பத்தில் எவரேனும் எரிவாயு, எரிபொருள், பால்மா, உரம், அல்லது இது போன்ற ஏதேனும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள வரிசையில் இருக்க நேர்ந்ததாக 88% மக்கள் தெரிவிக்கின்றனர். பொருளாதார நெருக்கடி காரணமாக தமது அல்லது தமது குடும்பத்தில் எவரேனும் ஒருவரின் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாக பத்தில் ஒன்பது பேர் தெரிவிக்கின்றனர். இந்த நெருக்கடி நிலைமை பொதுமக்களின் ஜனநாயக குடியுரிமை சார்ந்த உணர்வை எவ்வளவு விழிப்படைய

வைத்துள்ளது என்பதை ஆய்வு முடிவுகளானது காட்டுகின்றன. கிட்டத்தட்ட அரைவாசி அளவான இலங்கை மக்கள் இலங்கை தேசத்தின் அவல நிலைக்கு காரணமானவர்களுக்கு எதிராக நடாத்தப்படுகின்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஏதேனும் ஒன்றில் அவர்கள் அல்லது அவர்களின் குடும்பத்தில் எவரேனும் பங்குபற்றியுள்ளனர்.

**கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி மீதான குற்றச்சாட்டு**

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட மிக மோசமான நெருக்கடியாகக் கொள்ளப்படும் தற்போதைய நிதி நெருக்கடிக்கு கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கமே காரணம் என நாடு முழுவதிலும் உள்ள மக்கள் ஏகமனதாக குற்றஞ்சாட்டுகின்றனர். 62% இலங்கையர்கள், கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தின் மீது குற்றஞ்சாட்டுகின்ற அதேவேளை 14.5% மற்றும் 14.4% சதவீதத்தினர் முறையே சுதந்திரத்திற்குப் பின்னரான அனைத்து அரசாங்கங்களினதும் தவறான பொருளாதார முகாமைத்துவத்தின் மீதும் நாட்டின் ஊழல் மிகுந்த அரசியல் கலாச்சாரத்தின் மீதும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

**சகல அரசியல்வாதிகளும் கணக்காய்வுக்கு உட்படுத்தல் மற்றும் ராஜபக்ஷ குடும்ப அரசியலை முடிவுக்கு கொண்டுவரல்**

தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வாக பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கான பொதுமக்களின் ஆதரவை இந்த ஆய்வு சோதித்தது. சகல அரசியல்வாதிகளும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் அவர்களது கணக்கில் வராத செல்வங்கள் அரசால் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என 96% இலங்கையர்கள் கருதுகின்றனர். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் மற்றும் இலங்கை அரசியலில் இருந்து ராஜபக்ஷ குடும்பம் விலக வேண்டும் என்ற அபிப்பிராயத்தை பத்தில் ஒன்பது இலங்கையர்கள் கொண்டுள்ளனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கைக்கு 87% ஆதரவு தெரிவிக்கினறனர். ஆகவே, மக்கள் மனதில் நெருக்கடிக்கு தீர்வு காணும் விடயத்தில் ராஜபக்ஷர்களுக்கு எந்த பாத்திரமும் இல்லை என்பதுடன் அவர்கள் அகற்றப்படுவதை நெருக்கடிக்கான தீர்வாக கருதப்படுகின்றது என்பதையும் இந்த ஆய்வு தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது. மூன்று வருடங்களுக்கு முன்னர் அவர்களுக்கு பெரும்பான்மையாக வாக்களித்த சிங்கள மக்கள் உட்பட அனைத்து இனச் சமூகத்தவர்கள் மத்தியிலும் இந்தக் கருத்து இருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும், தற்போதைய நெருக்கடியில் இருந்து மீளும்வரை நாடானது நிபுணர்கள் குழுவினால் ஆளப்பட வேண்டும், நிறைவேற்று ஜனாதிபதி முறை முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும், பாராளுமன்றத்தில் இருக்கும் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும், மற்றும் 20ஆவது சீர்திருத்தம் நீக்கம் செய்யப்பட்டு 19ஆவது சீர்திருத்தம் போன்ற ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளுக்கும் தெளிவான மக்கள் ஆதரவு உள்ளது. எவ்வாறாயினும், பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் பதவி விலக வேண்டும் எனும் கோரிக்கை தொடர்பில் மக்கள் சற்று எச்சரிக்கையாக இருப்பது தெரிகின்றது. 56% இலங்கையர்கள் மட்டுமே இதற்கு ஆதரவு தெரிவித்தனர். ஆய்வு முடிவுகளின்படி இக்கோரிக்கைகளுக்கான ஆதரவு வேறுபட்ட இன சமூக அடிப்படையில் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடுகள் காணப்படவில்லை.

**பரவியுள்ள நம்பிக்கையின்மை**

இலங்கையர்களில் கணிசமான பெரும்பான்மையினர் தங்களின் எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தினர். 2% மட்டுமே மிக விரைவில் நாட்டின் பொருளாதார நிலை சீரடையும் என நம்புகின்றனர். நாட்டின் பொருளாதார நிலை சீரடைய நீண்ட காலம் செல்லும் என 58% சதத்தினர் நினைக்கின்ற வேளையில் அதற்கு சில காலம் செல்லும் என 14% சதத்தினர் நினைக்கின்றனர். நாட்டின் பொருளாதார நிலை எப்போது சீரடையும் என தங்களுக்கு தெரியாது என கால்வாசிக்கும் சற்று அதிக அளவிளான இலங்கையர்கள் தெரிவிக்கினறனர்.

ஆய்வு தொடர்பிலான மேலதிக தகவல்களுக்கு: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - சோஷல் இன்டிகேட்டர்